කෘෂිකර්ම අමාත්‍යාංශය

**கமத்தொழில் அமைச்சு**

**Ministry of Agriculture**

**80/5** ,"ගොවිජන මන්දිරය", රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
80/5, "கொவிஜன மந்திரய",ரஜமல்வத்தை ஒழுங்கை,பத்தரமுல்லை, இலங்கை.
80/5 ,"Govijana Mandiraya", Rajamalwatta Lane, Battaramulla, Sri Lanka.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය.<br>எனது இல.<br>My No. | SMFI/3/D/08/08 | ඔබේ අංකය.<br>உமது இல.<br>Your No. | | දිනය.<br>திகதி.<br>Date. | 2023.08.21 |

## அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்

## 2023/24 பெரும்போகத்திற்கு வயல் காணிகளில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ள நிதி நிவாரணத்தை அவர்களின் வங்கிகளுக்கு வரவுவைப்பதற்கான வேலைத் திட்டங்கள் பற்றிய வழிகாட்டல்கள்

### 1. நிவாரணம் பற்றிய கொள்கை

1.1 "2023/24 பெரும்போகத்திற்கு வயல் காணிகளில் பயிரிடும் விவசாயிகளுக்கு உர நிவாரணத்தை பெற்றுக் கொடுத்தல்" என்ற தலைப்பில் கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த 2023.06.28 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கௌரவ ஜனாதிபதியாகிய, நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர், பொது செலவின முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை உட்குழுவின் தலைவர் ஆகியோர் சமர்ப்பித்த 2023.07.13 ஆம் திகதிய குறிப்புடன் இணைக்கப்பட்ட 2023.07.12 ஆம் திகதி நடைபெற்ற பொது செலவின முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை உட்குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை கருத்தில் கொள்ளப்பட்ட பின்னர் 2023.07.17 ஆம் திகதி கூடிய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தின் போது வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம் 2023/24 பெரும்போகத்திற்கு வயல் காணிகளில் நெல்லை பயிரிடும் விவசாயிகளுக்கு, ஒரு விவசாயிக்கு ஆகக்கூடியது 02 ஹெக்டேயர் என்ற அளவுக்கு 15,000 ரூபா வீதமான ஒரு பணத் தொகையை நிவாரணமாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொடுத்து, நிதி நிவாரணத் தொகைகளை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்க வேண்டி உள்ளது.

1.2 ஆகையால் 2023/24 பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு சொந்தமான நாட்டில் உள்ள எந்த ஒரு பிரதேசத்திலாயினும் அல்லது பிரதேசங்களிலாயினும் சரி அமைந்துள்ள நெல் பயிரிடப்படும் ஆகக்கூடியது 02 ஹெக்டேயர் அளவான காணிகள் வரை மட்டும் 01 ஹெக்டேயருக்கு 15,000/- ரூபா வீதம் 02 ஹெக்டேயர்கள் வரை 30,000/- ரூபா ஆகக்கூடிய ஒரு நிதித் தொகையை விவசாயி ஒருவருக்கு, உரங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் நிதி நிவாரணத்தை பெற்றுக்




ලේකම් දුරකථන தொலைபேசி Telephone - 011-2034340 කාර්යාලය දුරකථන தொலைபேசி Telephone - 011-2034300
செயலாளர் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - secretary@agrimin.gov.lk அலுவலகம் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - info@agrimin.gov.lk
Secretary ෆැක්ස් தொலைநகல்° Fax - 011-2863497 Office ෆැක්ස් தொலைநகல் Fax - 011-2868910

கொள்ள உரித்துண்டு. அத்துடன் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு குறித்த நிவாரணத் தொகைகளை வரவுவைக்கும் பொறுப்பும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சாட்டப் பட்டுள்ளது.

1.3 இங்கு விவசாயி ஒருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு அல்லது அவரின் பெயரில் அல்லது விவசாயி எழுத்தில் பெயர்குறித்து அறிவித்த வங்கிக் கணக்குக்கு அல்லது பல வங்கிக் கணக்குகளுக்கு நிதியை வரவுவைப்பதன் மூலமாக இரட்டைப் பதிவுகள் அல்லது பல பதிவுகள் நிகழ்ந்து விவசாயி ஒருவருக்கு அதிகளவான பணம் வரவுவைக்கப்படுவதற்கான வாய்ப்புகளை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். நிவாரணத் தொகையை வரவுவைக்க விண்ணப்பிப்பவரின் சரியான ஆளடையாளத்தை உறுதிசெய்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்கும் பொறுப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரியதாகும்.

1.4 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம், விவசாயிகளுக்கு உரங்களைக் கொள்வனவு செய்யும் வகையில் குறித்த நிவாரணத் தொகைகளை உரிய விவசாயிகளின் கணக்குகளுக்கு வரவுவைக்க வேண்டும். எவரேனும் விவசாயி ஒருவருக்கு 2023/24 பெரும்போகத்திற்கு உரிய நிதி நிவாரணத் தொகை வரவுவைக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய விவசாயினது பெயரில் இயங்கும் ஒரு வங்கிக் கணக்கு இல்லையாயின் உரிய விவசாயி எழுத்தில் பெயர் குறிக்கும் ஒரு வங்கிக் கணக்குக்கு அந்த நிவாரணத் தொகையை வரவுவைத்து உரிய விவசாயிக்கு அவரின் நெற் பயிர் செய்கைக்கு தேவையான உரங்களைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும் உரிய விவசாயி தனது பெயரில் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்து அதை பேணிச்செல்ல இயலாதிருப்பின் அது பற்றி தேடிப்பார்த்து உரிய வங்கி மற்றும் ஏனைய உரிய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்துரையாடி அதன் நிமித்தம் தேவையான தீர்வை பெற்றுக் கொடுத்து அந்த விவசாயினது பெயரில் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்து அதை துல்லியமாக பேணிச்செல்வதற்கு விவசாயியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டுவதற்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

1.5 கமநல அபிவிருத்தித் திணைக்களம் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்கும் நிதியில் விவசாயிகள் கொள்வனவு செய்யும் உரங்களை அந்த விவசாயிகள் அவர்களின் நெற் பயிர்களுக்கு இடுவதை உறுதிசெய்து கொள்ள ஒரு வேலைத் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். காணி உரித்தற்ற எவரேனும் விவசாயி ஒருவர் வயல் காணிகளில் நெல்லை பயிரிடும் சந்தர்ப்பத்தில் (உதாரணம்:- குத்தகை விவசாயி, போகமாற்று முறை போன்ற வயல்களில் நெற் பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் முறை) உரிய பயிரை பயிரிடும் நபரின் வங்கிக் கணக்குக்கு உரிய நிவாரணத் தொகையை வரவுவைத்து அந்த விவசாயிக்கு அவரின் நெற் பயிருக்கு உரங்கள் சரியாக கிடைப்பதை உறுதிசெய்துகொள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

1.6 2023 சிறுபோகத்தில் நெல்லை பயிரிட்ட விவசாயிகள் தமது பயிர்களுக்கு உரங்களை பாவித்த பின்னர் கிடைத்த நிவாரண கூப்பான்களை பாவிக்காவிட்டாலும், அந்த விவசாயிகளுக்கு இந்த 2023/24 பெரும்போகத்தில் உரங்களை கொள்வனவு செய்யும் வகையில் நிவாரணத் தொகையை பெற்றுக் கொள்ள உரித்துண்டு.

1.7 01 ஹெக்டேயருக்கு, ஒரு போகத்திற்கு 15,000/- ரூபா வீதம் ஆகக்கூடியது 02 ஹெக்டேயர்கள் வரை 30,000/- ரூபா நிவாரணத் தொகை கிடைக்கக் கூடிய வகையில் விவசாயிக்கு சொந்தமான வயலின் அளவுக்கு ஏற்ப கிடைக்க வேண்டிய நிதி நிவாரணத் தொகை இந்த வழிகாட்டலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்புக்களும் கருமபணிகளும்

2.1 அமைச்சரவையின் தீர்மானத்தை செயற்படுத்தி நேர காலத்தோடு உரங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு நிதி நிவாரணத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் வயல் காணிகளில் நெல்லை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் அந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு குறித்த நிதி நிவாரணத் தொகைகளை உரிய முறையில் வரவுவைப்பதற்கான ஒரு வேலைச்சட்டகம் தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்தக் கால அட்டவணையின் பிரகாரம் பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய நிதிகளின் அளவுகள் பற்றி நேர காலத்தோடு கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும்.

2.2 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி நிவாரணத் தொகைகளை வரவுவைக்கும் போது மிகவும் இலகுவாகவும் வினைத்திறன் வாய்ந்ததாகவும் திறைசேரி காசுப்பாய்ச்சலை (Cash Flow Management of the Treasury) முகாமை செய்வதற்கு அந்தந்தப் பிரதேசங்களின் பயிர் கால அட்டவணைக்கு ஏற்ப உரிய பயிர்ச்செய்கைப் போகத்தினுள் அந்தந்த மாதங்களுக்குரிய மாதாந்த வசக்கட்டுநிதியின் அளவை கமநல சேவைகள் திணைக்களத்தினதும் கமத்தொழில் அமைச்சினதும் சிபாரிசுகளுடன் திறைசேரியினது செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னராவது அறிவிக்க வேண்டும் என்றிருப்பதால் அந்தத் தேவையைப் பூர்த்திசெய்ய கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

2.3 அமைச்சரவையினது தீர்மானத்தின் பிரகாரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கவுள்ள நிதி நிவாரணத் தொகைகளை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்கும் பொறுப்பு அதற்கு சாட்டப்பட்டுள்ளதால், அதன்படி உரித்து நன்மைகள் கிடைக்கும் விவசாயிகளுக்கு தாமதியாமல் அவர்களின் உரித்துடைய நிவாரணத் தொகைகளை அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்க தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு உரங்களை கொள்வனவு செய்யும் முகமாக நிதி நிவாரணத் தொகைகளை பெற்றுக் கொடுத்த நேரத்தில் 2016 சிறுபோகத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை செயற்படுத்திய முறையியலில் பெற்ற அனுபவத்தையும் விவசாயிகளுக்கு உர நிவாரணங்களை பெற்றுக் கொடுத்த போது பயன்படுத்திய முறையியல்களையும் உகந்தவாறு அடிப்படையாகக் கொண்டு இந்த 2023/24 பெரும்போகத்திற்கும் பின்பற்றுவது பொருத்தமானதாகும். முன்னர் நிவாரண நிதித் தொகைகளை பெற்றுக் கொடுத்த வேளையில் நிகழ்ந்துள்ளதாக இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளையும் மற்றும் முறைகேடுகளையும் தவிர்த்துக்கொள்வதற்கு தேவையான அனைத்து வகை நடவடிக்கைகளையும் எடுக்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் விரைவில் ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். இம்முறை 2023/24 பெரும்போகத்தில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு அவர்கள் நிதி நிவாரணத் தொகைகளுக்கு விண்ணப்பிப்பது முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிவாரணத் தொகைகளை வரவுவைப்பது வரை வேலைத் திட்டங்களை செயற்படுத்துவது பற்றி தமது பிரிவுத் தலைவர்களுக்கு தேவையான சுற்றறிக்கைகள், கட்டளைகள்,

விதிமுறைகள் மற்றும் அறிவுரைகள் என்பவற்றை கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் வெளியிடுதல் வேண்டும்.

நன்மைபெறும் விவசாயிகளின் தகவல்கள் அடங்கிய தரவு முறைமை உரிய முறையில் இற்றைப்படுத்தப்பட்டு பேணிச்செல்லப்படுதல் வேண்டும். நிதி நிவாரணத்தை பெறுவதற்கு தகுதியுடைய விவசாயிகள் மற்றும் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைத்த நிதித் தொகைகளை தரவு முறைமையின் ஊடாக பரிட்சித்துப்பார்க்கும் வாய்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

2.4 நிதி நிவாரணத்திற்கு விண்ணப்பித்த பின்னர் குறித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகள் மேன்முறையீடுகளை செய்வதற்கும் மற்றும் அத்தகைய மேன்முறையீடுகளை விரைவில் விசாரித்து உரிய தீர்மானங்களை உரிய காரணங்களுடன் அந்த மேன்முறையீட்டு தரப்புகளுக்கு அறிவிப்பதற்கும் முறையான ஒரு முறையியலை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.5 விவசாயிகளின் ஆளடையாளத்தை உறுதிசெய்து மோசடியான பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் நிவாரணம் பெறப்பட்டு, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்தால் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். மோசடியாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக உறுதிசெய்யப் படும் நிதி நிவாரணங்களை விரைவில் அரசாங்கத்திற்கு மீளறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.6 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைகளை அவர்களின் கணக்குகளுக்கு வரவுவைத்ததன் பின்னர் அவர்கள் மேலும் வயல் காணிகளில் நெல்லை பயிரிடுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளாவிட்டால் அரசாங்க நிதிகள் முறைகேடாகப் பாவிக்கப்படுவதை தவிர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான ஒரு வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு அந்த நிதி நிவாரண தொகைகள் குறிப்பிட்டவொரு காலப் பகுதியினுள் மீளறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வயல் காணிகளுக்கு அடுத்த 02 பயிர்ச்செய்கைப் போகங்களுக்கு எந்தவொரு நிவாரணத்தையும் கோர முடியாத வகையில் கறுப்புப்பட்டியல் படுத்தப்பட்டு குறித்த தகவல்கள் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.7 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி நிவாரணத் தொகைகளை வரவுவைக்கும் முகமாக வங்கிகளை தேர்ந்தெடுக்கும் போது ஒரு சில அரசாங்க வங்கிகளை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டும். உரிய வங்கிகளின் மூலம் விவசாயிகளின் கணக்குகளுக்கு உரிய நிவாரணத் தொகைகள் வரவுவைக்கப்பட்டமை தொடர்பாக ஒரு குறுங்செய்தியின் ஊடாக அறிவிப்பதற்கான வசதிகளும் மற்றும் வலையமைப்பு வசதிகளும் அடங்கிய வங்கிகளை தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இதன் போது இதற்கு முன்னர் உரங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் விவசாயிகளுக்கு நிதி நிவாரணங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுத்த வங்கிகளின் அனுவத்தை இந்த சந்தப்பத்திலும் உரியவாறு பயன்படுத்திக்கொள்வது உகந்ததாகும். நன்மை பெறும் விவசாயினது வங்கிக் கணக்குக்கு உரிய வங்கி, நிதியை வரவுவைத்தவுடன் அந்த விவசாயி அதனை அறிந்துகொள்வதற்கு பொருத்தமான ஒரு முறையியலை உரிய வங்கியுடன் கலந்துரையாடி அறிமுகப்படுத்தவும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

2.8 கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் உர நிதி நிவாரணத்தை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பாக செயற்படுத்தியுள்ள வேலைத் திட்டங்களையும் மற்றும் அத்தகைய வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்களையும் கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு தொடர்ச்சியாக அறிக்கையிடும் வகையில் மிகவும் வினைத்திறன் வாய்ந்த ஒரு திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை நாளில் முன்னேற்றத்தை பின்னர் வரும் திங்கட்கிழமை நாளில் கமத்தொழில் அமைச்சுக்கு அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

2.9 மேலும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு உரங்களைக் கொள்வனவு செய்யும் வகையில் நிதி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பான முறையியலை செயற்படுத்தும் போது தனது திணைக்களத்தின் அலுவலர்கட்கு வெளியிடும் சுற்றறிக்கைகள், கட்டளைகள், விதிமுறைகள் அல்லது எழுத்திலான அறிவுரை ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை அமைச்சின் செயலாளருக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## 3. <u>தேசிய உர செயலக அலுவலகத்தின் பொறுப்புக்களும் கருமபணிகளும்</u>

3.1. நிதி நிவாரணம் கிடைக்கும் நெல் விவசாயிகளுக்கு எந்தவொரு பற்றாக்குறையும் இல்லாமல் உரிய காலத்திற்கு உரிய தரமான உரங்களை திறந்த சந்தையில் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் அரச மற்றும் தனியார் துறை உரக் கூட்டுத் தாபனங்களுடன் இணைந்து ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அது பற்றி கமத்தொழில் அமைச்சருக்கும் மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயக்ததிற்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். சந்தையில் தரமான உரங்கள் பரவலாக கிடைப்பது தொடர்பாக விஷேட கவனத்தை செலுத்த தேசிய உர செயலக அலுவலகமும், அதன் மாவட்ட அலுவலகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு பரந்த மேற்பார்வையை மேற்கொள்ள வேண்டும். உரங்கள் பரவலாக கிடைப்பதில் ஒரு பிரச்சினை காணப்படுமாயின் அதனை நேர காலத்தோடு இனங்கண்டு அதன் நிமித்தம் எடுக்க வேண்டிய தீர்வுகள் பற்றி விரைவில் அமைச்சின் செயலாளருக்கு அறியப்படுத்துவது தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளரினது பொறுப்பாகும்.

3.2. உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் விவசாயிகளுக்கு நிதி நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் போது தேசிய உர செயலக அலுவலகத்தினதும் மற்றும் அதன் மாவட்ட அலுவலகங்களினதும் உத்தியோகத்தர்களின் அனுபவம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் கோருகின்ற சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்படுவதற்கும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் தேசிய உர செயலகத்தின் மாவட்ட அலுவலகங்கள் சரியான உகந்த ஒரு பங்குபற்றலில் 2023/24 பெரும்போகத்திற்கு உரிய நிதிகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

## 4. <u>விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிவாரண நிதியை வரவுவைக்கும் வங்கிகளின் பொறுப்புப் பணிகள்</u>

4.1. கமநல அபிவிருத்தித் திணைக்களம் உரிய முறையில் விடுக்கும் வேண்டுகோளுக்கு இணங்க கமத்தொழில் அமைச்சு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குக்கு வரவுவைக்கும் நிதியை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுரைகளின்படி சரியாக விரைவில்

விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைப்பதற்கு தேவையான ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்படுவது முக்கியமானதாகும்.

4.2. கமநல அபிவிருத்தித் திணைக்களம் உரிய அறிவுரைகளை வங்கிகளுக்கு வழங்கியவுடன் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிவாரண நிதியை விரைவில் வரவுவைக்க வங்கிகள் நடவடிக்கையை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். விவசாயிகளின் கணக்குகளுக்கு நிவாரண நிதிகள் வரவுவைக்கப்பட்டவுன் உரிய வங்கி, விவசாயிகள் உரங்களை கொள்வனவு செய்யும் வகையில் குறித்த நிவாரண நிதிகள் உரிய விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்கப்பட்டுள்ளமை மற்றும் உரிய நிதிகளின் அளவுகள் எவ்வளவு என்ற விபரங்கள் அடங்கிய ஒரு குறுங்-செய்தி சேவையை (SMS) அல்லது பொருத்தமான ஏனைய உகந்த ஒரு முறையியலை பின்பற்றி விவசாயிகளுக்கு அறியப்படுத்த தேவையான ஒரு வேலைத் திட்டம் வங்கிகளினால் செயற்படுத்தப்படுவது முக்கியமானதாகும்.

## 5. <u>விவசாயத் திணைக்களத்தின் பொறுப்புப்பணிகள்</u>

5.1. சரியான தரமான (Right source) உரங்களை சரியான நேரத்திற்கு (Right time) உரிய அளவில் (Right amount) உரிய விதத்தில் (Right place) இடும் வகையில் விவசாயிகளை விழிப்பூட்டுவதற்கு உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து விவசாய விரிவாக்கல் சேவைகளின் மூலமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். ஒன்றிணைந்த தாவர போஷனை முறையியல்களை பின்பற்றுவதிலுள்ள முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி உரங்களின் வினைத் திறனை மேம்படுத்த தேவையான உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

5.2. மண்ணின் வளமும் மண்ணின் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படும் வகையில் உரங்களின் மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புகளை தவிர்ப்பதற்கு மண் பரிசோதனைகளையும் தாவரங்கள் நிற சுட்டிகளையும் பயன்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதன் ஊடாக உரங்களின் அதிகளவு பாவனையையும் முறையற்ற பாவனையையும் தவிர்ப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் இணைந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். தரமான வினைத்திறன் வாய்ந்த பொருத்தமான உர வகைகள் மற்றும் சிபாரிசுகள் பற்றிய இயற்றைப்படுத்திய தகவல்களை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்து அவர்களை ஊக்கப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும்.

## 6. <u>விவசாயத் திணைக்களத்தினதும், மாகாண விவசாயத் திணைக்களங்களினதும் மற்றும் மகாவலி அதிகார சபையினதும் பொறுப்புப்பணிகள்</u>

6.1. உரங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல், ஒன்றிணைந்த தாவர போஷனை, வளமான மண் வளத்தை பேணிச்செல்லல், மண்ணின் ஆரோக்கியம் போன்ற விவசாயிகளுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு அவற்றுக்கு விவசாயிகளை குறிப்பீடு செய்ய உரிய நிறுவனங்கள் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடுதல்.

## 7. கமத்தொழில் அமைச்சின் பொறுப்புப் பணிகள்

7.1. கமநல அபிவிருத்தித் திணைக்களம் உரிய முறையில் விடுக்கின்ற வேண்டுகோள்களுக்கு இணங்க விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிதிகளை வரவுவைக்க கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு திணைசேரியுடன் இணைந்து உரிய நடவடிக்கையை எடுத்தல்.

7.2. இந்த வேலைத் திட்டத்தின் சகல நடவடிக்கைகளையும் முழுமையான மேற்பார்வையில் கமத்தொழில் அமைச்சு செயற்படுத்த வேண்டும். அதன் நிமித்தம் கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, தேசிய உர செயலக அலுவலகம் ஆகியவற்றினதும், சகல மாவட்ட செயலாளர்களினதும் மற்றும் இந்த வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதில் முக்கிய பங்குவகிக்கும் அரச நிறுவனங்களினதும் அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் சொந்தமான நிறுவனங்களினதும் மற்றும் அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறையின் உரக் கூட்டுத் தாபனங்களினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதாகும். ஆகையால் விவசாயிகளுக்கு உரிய கால நேரத்திற்கு உரிய தரமான உரங்களை உரிய அளவுகளில் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் சந்தைகளில் உரங்கள் பரவலாக கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுத்து ஏதாவது பிரச்சினைக்குரிய நிலைமைகள் அல்லது தமது அதிகாரப் பிரிவில் தீர்ப்பதற்கு கஷ்டமான ஏதாவது விடயங்கள் காணப்படுமாயின் தாமதியாமல் அது பற்றி கமத்தொழில் அமைச்சுக்கு விரைவாக அறியப்படுத்தி அதன் நிமித்தம் தேவையான உரிய தீர்வுகளை விரைவாக பெற்றுக் கொடுத்து விவசாயிகளுக்கு இடையில் உரங்கள் தொடர்பாக பிரச்சினைகள் ஏதும் ஏற்படாதவாறு நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு தேவையான உரிய உதவி ஒத்தாசைகளை கமத்தொழில் அமைச்சுக்கு நல்குவது சகல நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களினதும் பொறுப்பும் கடமையும் என கருதி தொழிற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

## 8. மேற்பார்வை

8.1. நிதி நிவாரணங்களை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் விவசாயிகள் நெற் பயிர்களுக்கு உரங்களை இடுதல் ஆகிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருங்கிய முறையில் மேற்பார்வை செய்வதற்குரிய வலிமையான ஒரு வேலைத் திட்டத்தை உரிய மாவட்ட செயலாளர்களின் தலைமையிலான மாவட்ட உர ஒருங்கிணைப்பு உட்குழு மேற்கொள்ள வேண்டும்.

8.2. தத்தமது மாவட்டத்தின் நிதி நிவாரண விடயங்களை கமநல சேவை நிலைய மட்டத்தில் மேற்பார்வை செய்தல் மற்றும் உரிய முறையில் செயற்படுத்தல் மாவட்டத்திற்கு பொறுப்பாக உள்ள சகல கமநல அபிவிருத்திப் பிரதி ஆணையாளர்களின் / உதவி ஆணையாளர்களின் நேரடிப் பொறுப்பாகும்.

8.3. தேசிய உர செலக அலுவலகம் மாவட்டத்திற்கு நியமித்துள்ள உதவிப் பணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டத்தினுள் உரங்களின் தரம் அல்லது உரங்கள் பரவலாக கிடைத்தல் பற்றி ஆராய்ந்து தேவையான பிரிவுகளுக்கு அறியப்படுத்தி விவசாயிகளுக்கு உரங்களை குறைகள்

இல்லாமல் உரிய நேர காலத்திற்கு உரிய தரமான உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பளிக்கும் பொறுப்பு.

8.4. தத்தமது அதிகாரப் பிரதேசத்தில் நிதி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான உரிய சகல நடவடிக்கைகளையும் இந்த வழிகாட்டலில் உள்ள அறிவுரைகளுக்கு இணங்க மேற்பார்வை செய்வது சகல பிரதேச செயலாளர்களினதும் பொறுப்பாகும். முன்னேற்றங்களும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டங்களின் போது விரிவாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

8.5. உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் போது மாவட்ட மட்டத்தில் மேற்பார்வையும் முன்னேற்ற மீளாய்வும் அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களினது தலைமையில் மேற்கொள்ளப்பட்டு அந்தந்த மாவட்டங்களின் முன்னேற்றங்கள் அடங்கிய அறிக்கை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மாவட்ட செயலாளர்களின் ஊடாக கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப் படுவதற்கு உரிய மாவட்டத்தின் கமநல சேவை ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப் படுதல் வேண்டும். மாவட்ட ரீதியில் தயாரித்த ஒட்டுமொத்த மாதாந்த முன்னேற்ற அறிக்கை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் கமத்தொழில் அமைச்சருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

இந்த வழிகாட்டலில் உள்ள அறிவுரைகளையும், வரையறைகளையும் மற்றும் நிபந்தனைகளையும் சரியான முறையில் புரிந்துகொள்ளுமாறும், தேவையான விதத்தில் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், உர நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிடைக்கும் நிதிகளை முறையற்ற விதத்தில் பெற்றுக் கொள்வது அல்லது துஷ்பிரயோகம் செய்வது அல்லது அத்தகைய செயல்களுக்கு உதவுவது சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றம் என்பதால் சகல தரப்புகளையும் இது பற்றி அறியப் படுத்தி அத்தகைய செயல்கள் நிகழ்வதற்கான சந்தர்ப்பத்தை தவிர்த்துக்கொள்ள தேவையான உள்ளக சோதனைகளை மேற்கொள்ளவும் மற்றும் கட்டுப்பாட்டு விதிமுறைகளை செயற்படுத்தவும் சகல உத்தியோகத்தர்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பங்களிப்பில் அடிக்கடி கணக்காய்வுகளை மேற்கொள்ள பொருத்தமான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

2023/24 பெரும்போகத்தில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் போது குறித்த அமைச்சரவையின் தீர்மானத்தை செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விவசாய, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியையும் மற்றும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளவும் போன்ற குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் செயற்படுவதால் உங்களிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பை நான் பெரிதும் மதிக்க கடமைப்பட்டுள்ளேன்.

கையொப்பமிடப்பட்டது: குணதாச சமரசிங்க
செயலாளர்
கமத்தொழில் அமைச்சு

**பிரதிகள்:**

1) ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்
2) பிரதமரின் செயலாளர், பிரதமரின் அலுவலகம்
3) கணக்காய்வாளர் தலைமை அதிபதி
4) செயலாளர், நிதி அமைச்சு
5) செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டு அலவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு
6) செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
7) சகல மாகாண பிரதம செயலாளர்கள்
8) சகல மாவட்ட செயலாளர்கள்
9) பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
10) பணிப்பாளர் நயாகம், அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
11) பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்

12) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்
13) பணிப்பாளர் நாயகம், மகாவலி அதிகார சபை
14) பணிப்பாளர் நாயகம், திறைசே செயற்பாடுகள் திணைக்களம்
15) சகல மேலதிக செயலாளர்கள் / பணிப்பாளர் நாயகங்கள், கமத்தொழில் அமைச்சு
16) தலைமை நிதி அதிகாரி, கமத்தொழில் அமைச்சு
17) பணிப்பாளர், தேசிய உர செயலக அலுவலகம்
18) தலைவர், இலங்கை உரக் கூட்டுத்தாபனம் / கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம்
19) தலைவர், விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை
20) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்களிக்கும் வங்கிகளின் தலைவர்கள்
21) தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் (உரம்), கமத்தொழில் அமைச்சு

**பின்னிணைப்பு 1**

| **வயல் காணியின் அளவு (x)** (ஏக்கர் / ஹெக்டேயர்) | **கிடைக்க வேண்டிய நிவாரணத் தொகை (ரூ.) 2023/24 பெரும்போகம்** |
|---|---|
| 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.00 < x ≤ 0.10 ) | 1,500.00 |
| 1/4 ஏக்கருக்கு அதிகம் 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.1 < x ≤ 0.20 ) | 3,000.00 |
| 1/2 ஏக்கருக்கு அதிகம் 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.20 < x ≤ 0.30 ) | 4,500.00 |
| 3/4 ஏக்கருக்கு அதிகம்1 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.30 < x ≤ 0.40 ) | 6,000.00 |
| 1 ஏக்கருக்கு அதிகம் 1 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.40 < x ≤ 0.50 ) | 7,500.00 |
| 1 1/4 ஏக்கருக்கு அதிகம் 1 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.50 < x ≤ 0.60 ) | 9,000.00 |
| 1 1/2 ஏக்கருக்கு அதிகம் 1 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.60 < x ≤ 0.70 ) | 10,500.00 |
| 1 3/4 ஏக்கருக்கு அதிகம் 2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.70 <x ≤ 0.80 ) | 12,000.00 |
| 2 ஏக்கருக்கு அதிகம் 2 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.80 < x ≤ 0.90 ) | 13,500.00 |
| 2 1/4 ஏக்கருக்கு அதிகம் 2 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.90 < x ≤ 1.00) | 15,000.00 |
| 2 1/2 ஏக்கருக்கு அதிகம் 2 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.00 < x ≤ 1.10) | 16,500.00 |
| 2 3/4 ஏக்கருக்கு அதிகம் 3 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.10 < x ≤ 1.20) | 18,000.00 |
| 3 ஏக்கருக்கு அதிகம் 3 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.20 < x ≤ 1.30) | 19,500.00 |
| 3 1/4 ஏக்கருக்கு அதிகம் 3 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.30 < x ≤ 1.40) | 21,000.00 |
| 3 1/2 ஏக்கருக்கு அதிகம் 3 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.40 < x ≤ 1.50) | 22,500.00 |
| 3 3/4 ஏக்கருக்கு அதிகம் 4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.50 < x ≤ 1.60) | 24,000.00 |
| 4 ஏக்கருக்கு அதிகம் 4 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.60 < x ≤ 1.70) | 25,500.00 |
| 4 1/4 ஏக்கருக்கு அதிகம் 4 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.70 < x ≤ 1.80) | 27,000.00 |
| 4 1/2 ஏக்கருக்கு அதிகம் 5 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.80 < x ≤ 1.90) | 28,500.00 |
| 4 3/4 ஏக்கருக்கு அதிகம் 5 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.90 < x ≤ 2.00) | 30,000.00 |